**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் பங்குனி–1–ஆம் நாள் ஆங்கில வருடம் 2022 மார்ச் 15 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றபொருள்:1**

**ந.க.எண்.600/2019/எச்1**

அரசு செயலாளர், தமிழ்நாடு தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். U-38/2022, ந.க.எண்.2159/2022/ந.தே2, நாள்.25.02.2022 இன்படி காங்கயம் நகராட்சியில் மறைமுகத்தேர்தலில் நகர்மன்ற துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் **04.03.2022** அன்று நடத்தப்பட்டது. இதில், நகர்மன்ற துணைத்தலைவராக வார்டு எண்.4 உறுப்பினர் திரு. அ. இப்ராகிம்கலிலுல்லா அவர்களை நகர்மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர், திரு.அ.இப்ராகிம்கலிலுல்லா அவர்கள் **08.03.2022** ஆம் தேதிய இராஜினாமா கடிதம் மூலம் தனது துணைத்தலைவர் பதவியை மட்டும் இராஜினாமா செய்வதாகவும், இந்த முடிவை தாம் சுயமாக முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1 |
| **நாள் :** | 15.03.2022 |
| **தீர்மானம் :** | திரு.அ.இப்ராகிம்கலிலுள்ளா அவர்களின் துணைத்தலைவர் பதவி மட்டும் ராஜினாமாவை மற்றும் ஏற்கப்பட்டது. |

**(ஒ.ம்) திரு. ந. சூர்யபிரகாஷ்**
**நகர்மன்றத்தலைவர்**
**காங்கயம் நகராட்சி**

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் பங்குனி–16 –ஆம் நாள் ஆங்கில வருடம் 2022 மார்ச் 30 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.10 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்: 1**

**ந.க.எண்.1984/2021/சி1**

காங்கயம் நகராட்சி ஆணையாளர் திரு.சே.வெங்கடேஷ்வரன் அவர்களின் பிப்ரவரி 2022 ஆம் மாதத்திற்கான (01.02.2022 முதல் 28.02.2022 வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 2 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 2**

**ந.க.எண்.902 /2021/சி1**

காங்கயம் நகராட்சி பொறியாளர் திரு.ம.திலீபன், அவர்களின் பிப்ரவரி 2022 ஆம் மாதத்திற்கான (01.02.2022 முதல் 28.02.2022 வரை) தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 3 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

மன்றப்பொருள்: 3

ந.க.எண்.40 /2022/ இ1

நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளது. இந்நகராட்சி 22.17 சதுர கி.மீட்டர் பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கியதாகும். 2011—ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 32147 ஆகும்.

இந்நகராட்சியில் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 2000ம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகரிலிருந்து 42 கி.மீ துாரத்தில் காவிரி ஆறு அமைந்துள்ள கொடுமுடி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இச்சிப்பாளையம், மேட்டுக்கடை,வாலிபனங்காடு ஆகிய இடங்களில் உள்ள நீருந்து நிலையங்களில் பம்பிங் செய்யப்பட்டு நகரத்திலுள்ள அய்யாச்சாமி காலனி நீருந்து நிலையத்திற்கு வந்தடைகிறது. அங்கிருந்து நகராட்சிக்குட்பட்ட 6 மேல்நிலைத் தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

மேற்படி நீருந்து நிலையங்களில் காவேரி குடிநீர் பம்பிங் செய்யப்படும் பொழுது பம்பிங் மெயினில் குழாய் உடைப்புகள் மற்றும் மேட்டுக்கடை, வாலிபனங்காடு மற்றும் இச்சிப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள நீருந்து நிலையங்களில் ஏற்படும் மோட்டார் பழுதுகள், கேபிள் பழுதுகள் மற்றும் வால்வு பழுதுகள் ஆகியவை அடிக்கடி ஏற்படுகிறது.

மேலும், கொடுமுடி காவேரி ஆற்றிலிருந்து காங்கயம் நகராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் இடையில் உள்ள நீருந்து நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மாதாந்திர ஒரு நாள் மின்தடை ஏற்படுவதால், பொதுமக்களுக்கு சீரான இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், 7 வழியோரக் கிராமங்களுக்கும் வாரம் ஒரு முறை குடிநீர் வழங்கப்படுவதால், நகரப் பகுதிக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரின் அளவும் குறைகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகராட்சிக்கு 5.18 எம்.எல்.டி அளவு குடிநீர் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்சமயம் சராசரியாக 3.00 எம்.எல்.டி முதல் 3.50 எம்.எல்.டி அளவிலேயே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் காங்கயம் நகராட்சி பொதுமக்களுக்கு 10 நாட்கள் முதல் 12 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே சுழற்சி முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் நிலை உள்ளது. மேற்படி குடிநீர் வழங்க வேண்டிய அளவை அதிகரித்து தருமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு

பலமுறை கடிதம் அனுப்பியும், நேரில் தெரிவித்தும் நாளது தேதி வரை குடிநீர் அதிகரித்து வழங்கப்படாத நிலையிலேயே உள்ளது. இதனால் பொதுமக்கள் மத்தியில் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்படும் குடிநீருக்கு 1000லிட்டருக்கு ரூ.10.94/– வீதம் சராசரியாக மாதந்தோறும் ரூ.8.50 இலட்சம் என வருடத்திற்கு ரூ.102.00 இலட்சம் குடிநீர் கட்டணம் நகராட்சியால் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது கூடுதலாக காங்கயம் நகராட்சிக்கு மட்டும் (Own source) கொடுமுடியில் இருந்து தனி குடிநீர் திட்டம் செயல்படுத்தும் பட்சத்தில் காங்கயம் நகராட்சிக்கு தேவையான அளவிற்கு குடிநீர் கிடைக்கப்பெற்று குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய இயலும். மேற்படி தனி குடிநீர் திட்டம் செயல்படுத்த உத்தேசமாக செலவாகும் ரூ.56.00 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 4 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | முழு மானியமாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 4**

**ந.க.எண்.325/2022/இ1**

காங்கேயம் நகராட்சி ஆனது 2010 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. காங்கயம் நகராட்சியானது நகராட்சியாக தோற்றுவிப்பதற்கு முன்னால் தேர்வுநிலை பேரூராட்சி ஆக செயல்பட்டு வந்தது அதன் பிறகு மக்கள் தொகை மற்றும் வருமானத்தின் அடிப்படையில் நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பேரூராட்சியாக செயல்பட்டு வந்த போது பணிபுரியும் அலுவலர்கள் கட்டமைப்புக்கு ஏற்ப அலுவலக கட்டிடம்

கட்டப்பட்டுள்ளது. நகராட்சி ஆன பிறகு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு துறை தலைவர் நியமனம் செய்து அதன் கீழ் பணிபுரிய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பணி புரிகிறார்கள். இதனால் ஒவ்வொரு அலுவலர்கள் பணி புரிய தேவையான இடவசதி இல்லாமல் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். மேலும் அலுவலகத்திற்கு வந்து போகும் பொதுமக்களும் இடவசதி இல்லாமல் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். மேலும் அலுவலக வளாகத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டு பல வருடங்களுக்கு மேல் ஆவதால் கட்டிடங்களில் அடிக்கடி பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது இதனால் கூடுதல் செலவினங்கள் ஏற்படுகிறது. எனவே மேற்காணும் காரணங்களைக் கொண்டு அலுவலக வளாகத்தில் உள்ள அனைத்து இடங்களையும் இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட வேண்டியுள்ளது. கீழ்த்தளம் தரை தளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்ட ரூ 500.00 லட்சம் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ஆகும். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக ஏதாவது ஒரு நிதியில் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 5 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 5**

**ந.க.எண்.1676/2021/இ1**

காங்கயம் நகராட்சியில் ஆணையாளர் பயன்பாட்டிற்கு ஒரு ஈப்பு வாகனம் மற்றும் குடிநீர் திட்ட பணிகளை பார்வையிட ஒரு ஈப்பு வாகனம் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தற்போது நடைபெற்று முடிந்த நகர்மன்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தனியாக ஒரு ஈப்பு வாகனம் ஒதுக்க வேண்டியுள்ளது.

எனவே நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கென புதிதாக மகேந்திரா ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் வாங்க வேண்டியுள்ளது. Gem Rate இன்படி புதிதாக மகேந்திரா ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் அங்கீகரிக்கப்பட்ட டீலர் மூலமாக வாங்குவதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ.15.30 லட்சம் ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கலாம்.
3. புதியதாக ஈப்பு வாகனம் வாங்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 6 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 6**

**ந.க.எண்.00275 /2022/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் பகுதி அளவு மின் தேவையை பூர்த்தி செய்ய அலுவலகத்தின் மேல் தளத்தில் சோலார் பேனல் அமைக்கப்பட்டுள்ளது ஆனால் தற்போது சோலார் பேனலில் பழுதுகள் ஏற்பட்டு உள்ளதால் அதன் மின் உற்பத்தி திறன் குறைந்து உள்ளது. எனவே, சோலார் பேனல்களை சரி செய்து மின் உற்பத்தி திறனை பெருக்க வேண்டியுள்ளது. எனவே, இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.30 இலட்சம் ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 7 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 7**

**ந.க.எண்.00291 /2022/இ1**

திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காங்கயம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கபட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 18 வார்டுகளை உள்ளடக்கியதும் மற்றும் நகராட்சியின் மக்கள் தொகை 32147 ஆகும் . இதன் பரப்பளவு 22.17 சதுர கி.மீ ஆகும். இந்நகராட்சியானது திருப்பூர் நகரத்திற்கு அருகில் அமைந்துள்ளதால் மிகவும் வளர்ந்து வரும் நகரப்பகுதியாக உள்ளது. வளர்ந்து வரும் நகர்ப்பகுதியாக உள்ளதால், வசிக்கும் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு நடப்பு நிதியாண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தில் 13.66 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு , பணிகள் துவங்கப்படும் நிலையில் உள்ளது. நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பொதுநிதி மற்றும் திட்டப்பணிகளை,கண்காணிக்க உரிய அலுவலர்கள் இல்லாத நிலையில் உள்ளது. மேலும் இப்பணிகளை கண்காணிக்க நிரந்தரமாக பணி மேற்பார்வையாளர் அலுவலக பணியிடம் தேவைப்படுகிறது.

இப்பணியிடம் தற்போது வரை அருகிலுள்ள நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களை கொண்டு கண்காணிக்கப்படுவதால் காலதாமதங்கள் ஏற்படுகிறது. இதனால் அரசிற்கு அனுப்ப நேரிடும் கோப்புகளை உரிய நேரத்தில் அனுப்ப இயலாத நிலையுள்ளது. எனவே, நடைபெறும் திட்டப்பணிகள் மற்றும் இதரப்பணிகளை தொடர்ந்து கண்காணிக்கவும், ஏற்படும் காலதாமதங்களை தவிர்க்கும் பொருட்டு மற்றும் அரசு திட்டங்கள் குறித்த காலத்தில் செய்து முடிப்பதற்கு ஏதுவாகவும், இந்நகராட்சிக்கு புதியதாக பணி மேற்பாவையாளர் பணியிடம் தோற்றுவிக்க வேண்டியுள்ளது. இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணி மேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்க, அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 8 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 8**

**கோப்பு எண். 0333 /2022/ இ1**

காங்கயம் நகராட்சி Compost yard வளாகத்தில் FSTP அமைக்கப்பட்டுள்ளது. அதை இயக்குவதற்கு Operation and Maintanence பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 9 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 9**

**கோப்பு எண். 2072 /2021/ இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகம் திருப்பூர் – தாராபுரம் சாலையில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுகத்தில் முதல் தளத்தில் பொறியாளர் பிரிவு அறை மற்றும் வருவாய் பிரிவு அறைகள் உள்ளன.இந்த அறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தங்கள் இருக்கையில் பணியாற்றும் விதமாக Aluminium partition அமைக்க வேண்டியுள்ளது. மற்றும் இரண்டாம் தளத்தில் கூடுதலாக GI Sheet மேற்கூரை மற்றும் மறைப்பு ஏற்ப்படுத்தி புதியதாக அறையும் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் பொறியாளர் அறையில் செயல்பட்டு கொண்டியிருக்கும் A.C யும் பழுது நீக்கி செயல்படுத்த வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணுாறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 10 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 10**

**ந.க.எண்.00289 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17 இல் அமைந்துள்ள பதுமன் குலத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021 2022 கீழ் 404.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் குளத்தை தூர்வாரி சுத்தப்படுத்தி மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டு மக்களின் பொழுது போக்கு அம்சமாக திறந்து விடப்பட உள்ளது. ஆனால் தற்போது குளத்திற்கு Inlet-ல் வரும் மழைநீரில், கழிவுநீர் கலந்து வருகிறது.எனவே மேற்கொள்ளப்பட இருக்கும் மேம்பாட்டு பணிகள் பயனற்றதாகி விட வாய்ப்புகள் உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு குளத்திற்கு வரும் மழைநீர் மற்றும் கழிவு நீரை குளத்திற்கு மேற்கே ஏற்கனவே உள்ள அண்ணா நகர் வடிகாலில் சேர்க்க புதியதாக வடிகால் கட்ட வேண்டியுள்ளது. புதியதாக வடிகால் கட்ட ரூ 20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 11 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 11**

**ந.க.எண்.00270/2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3 மூர்த்திரெட்டிபாளையம் ஏடி காலனி பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் டைல்ஸ் பிளம்பிங் மற்றும் மின்சார வசதிகளில் பழுதுகள் ஏற்பட்டு உள்ளது. இதனால் பொதுமக்கள் கழிப்பிடத்தை உபயோகிக்க சிரமமாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி, பழுதுகள் சரி செய்து கழிப்பிடத்தை புதுப்பிக்க வேண்டியுள்ளது.

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ 1.80 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 12 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 12**

**ந.க.எண்.00265 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 11 பழையகோட்டை சாலையில் மழைநீர் செல்ல போதிய மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், சாலைகளின் ஓரங்களிலேயே தண்ணீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி அவசியமாகிறது. இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ 9.80 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 13 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 13**

**கோப்பு எண். 0335 /2022/ இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகம் திருப்பூர் – தாராபுரம் சாலையில் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்திற்கு அன்றாடம் அரசாங்க அலுவலகத்திலிருந்து வரும் mail களை பிரிண்ட் எடுக்கவும் மற்றும் அதற்குரிய பதில்களை upload செய்யவும், இப்பணிகளை மேற்கொள்ளும் கணினி ஆப்ரேட்டக்கு தனி அறை ஒதுக்க வேண்டியுள்ளது. ஒதுக்கப்படும் கணினி ஆப்ரேட்டர் அறையில் Aluminium partition computer table மற்றும் இருக்கை வசதிகள் செய்ய வேண்டியுள்ளது.

மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.70 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 14 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 14**

**கோப்பு எண். 0033 /2022/ இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகம் திருப்பூர் – தாராபுரம் சாலையில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுக வளாகத்தில் அமைந்துள்ள கட்டிங்கள் கட்டபட்டு பல வருடங்களுக்கு மேல் வருகிறது.அதனால் கட்டிடம் பழுதடைந்தும், மற்றும் பொலிவு இழந்தும் காணப்படுகிறது, வளாகத்தின் பின்புறம் உள்ள கட்டிங்களின் பொலிவு

ஏற்ப்படுத்தும் வகையில் வர்ணம் பூசி புதுப்பிக்க வேண்டியுள்ளது.எனவே வளாகத்தின் பின்புறம் பக்கவாட்டு கட்டடிங்களால் உட்புறம் பகுதிகள் மற்றும் காம்பவுண்டு சுவர் ஆகிய கட்டிங்களில் புதியதாக வர்ணம் பூசி புதுப்பிக்க வேண்டியுள்ளது.

மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணுூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 15 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 15**

**கோப்பு எண். 1960 /2021/ இ1**

காங்கயம் நகராட்சியில் அமராவதி குடிநீர் திட்டம் , காவிரி கூட்டு குடிநீர் திட்டம் என இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் நூற்றுக்கு மேற்ப்பட்ட சிறுமின் விசை பம்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை பராமரித்து இயக்க நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் நகராட்சியில் அன்றாட நடைபெறும் திட்டம் மற்றும் பெது நிதி வேலைகளை கண்காணிக்கவும் போதிய பணியாளர்கள் இல்லை. எனவே ,ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்ட பணியாளர்களை பயன்படுத்தி மேற்காணும் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) குழாய் திருப்புனர் – 4 எண்ணிக்கை
2) Pump Operator – 5 எண்ணிக்கை
3) Jeep Driver - 1 எண்ணிக்கை
4) தொழில் நுட்ப பணியாளர் – 2 எண்ணிக்கை

மேற்படி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து மாதா ,மாதம் சம்பளம் கொடுப்பதற்கு ஆகும். உத்தேச செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மானத்தில் மன்ற பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் எண்.1893 31.08.2021 நாளில் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி தொகை முமுவதும்

செலவு செய்யப்பட்டு விட்டதால் பணி மேற்கொள்ளும் மேற்காணும் பணி பயனர்களுக்கு மாத சம்பளத்தொகை 3 மாத காலத்திற்கு (January, February , March) ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகையின் அடிப்படையில் வழங்கு காலநீட்டிப்பு வழங்கலாம்.

காலநீட்டிப்பு செய்ய முன்று மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.7.30 இலட்சம் ஆகும். உத்தேச செலவின தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை தொடரும் பொருட்டு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 16 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 16**

**ந.க.எண்.00247 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் தற்போது மின் விளக்குகள் மற்றும் மின்சார வயர்கள் பழுது ஏற்பட்டு உள்ளதால் இரவு நேரங்களில் போதுமான வெளிச்சம் இல்லை. இதனால் சமூக விரோத சம்பவங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் பயணிகள் பெருதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

பயணிகள் வசதிக்காக மின் விளக்குகள் மற்றும் மின்சார வயரிங் பழுதுகள் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ 2.00 இலட்சம் ஆகும். உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 17 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 17**

**ந.க.எண்.00252 /2022/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 திரு.வி.க.நகர் பகுதியில் மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், மழைநீர் செல்ல வழியின்றி இப்பகுதியில் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி அவசியமாகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.17.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 18 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | முழு மானியமாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 18**

**ந.க.எண்.00288 /2022/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் பதிவு அறை அமைந்துள்ளது. நகராட்சி அலுவலகத்தின் விரிவாக்கம் காரணமாக கோப்புகளை பாதுகாப்பாக வைக்க போதுமான இடம் இல்லை. எனவே இரண்டாம் தளத்தில் உள்ள காலியிடங்களில் G.I roof அமைத்து பதிவு அறை விரிவாக்கம் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள ரூ **4.10** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 19 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 19**

**கோப்பு எண். 1919 /2021/ இ1**

காங்கயம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–22ம் நிதியாண்டில் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வளாகம் வார்டு எண்.2 S.F.NO.438–ல் புதியதாக தினசரி மற்றும் வாரச்சந்தை கடைகள் கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.962.00 இலட்சத்திற்கு அரசாணை எண்.19, 25.01.2022 ம் நாளிட்ட கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற அரசாணை நகல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 20 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 20**

**கோப்பு எண். 1621 /2021/ இ1**

காங்கயம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2021–22ம் நிதியாண்டில் வார்டு எண்.7 பதுமன் குளம் நீர் நிலையை மேம்படுத்துதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.404.00 இலட்சத்திற்கு அரசாணை எண்.16, 20.01.2022 ம் நாளிட்ட கடிதத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வரப்பெற்ற அரசாணை நகல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 21 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 21**

**கோப்பு எண்.0315 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர் காடு மேல்நிலைத் தொட்டிக்கு சுற்றுசுவர் அமைத்தல் (நீளம் **–95.0**.மீ, உயரம் **–1.80**.மீ) கட்டுதல் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) **2021–22** ன் கீழ் ரூ.**12.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ். சுப்பையா மதிப்பீட்டை விட -0.23 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட -0.43 % குறைவு

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.43 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திவ்ய தர்ஷினி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 22 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 22**

**கோப்பு எண்.0323 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணி கட்டுதல் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (Un Tied Grant) **2020–21** ன் கீழ் ரூ.**21.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட - 0.33 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட +4.00 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.33 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 23 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 23**

**கோப்பு எண். 0310 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சந்தை பேட்டை பகுதியில் **1.00** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தெக்க தொட்டி (**7.50**மீ விட்டம் மற்றும் **3.00** மீ உயரம் ) கட்டுதல் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) **2021–22** ன் கீழ் ரூ.**16.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருமணி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -1.71 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட -3.58 % குறைவு

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -3.58 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திவ்ய தர்ஷினி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 24 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 24**

**கோப்பு எண்.0305 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பழையகோட்டைரோடு சாலையில் குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (UnTied Grant) **2020–21** ன் கீழ் ரூ.**34.20** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -0.**12** % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட +1.01 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.**12** % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 25 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 25**

**கோப்பு எண். 0308 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (Un Tied Grant) **2021–22** ன் கீழ் ரூ.**23.50** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருமணி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -0.**41** % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட -5.16 % குறைவு

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -5.16 %

குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திவ்ய தர்ஷினி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 26 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 26**

**கோப்பு எண். 0307/2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர்பந்தல் நீருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் பராமரிப்பாளர் அறை கட்டுதல் பணியை **15**வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) **2021–22** ன் கீழ் ரூ.**32.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **28.01.2022** –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -0.**03** % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட +4.91 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.**03** % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 27 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 27**

**கோப்பு எண். 0303/2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அய்யாச்சாமி நகர் காலனி பகுதியில் குடிநீர் குழாய் அமைக்கும் பணியை 15வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) 2020–21 ன் கீழ் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.01.2022 –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -0.56 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட +1.97 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.56 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஸ்ரீவைஸ்ணவி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 28 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 28**

**கோப்பு எண்.0301 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர்பந்தல் நீருந்து நிலையத்தில் 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டி கட்டும் பணியை 15வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) 2020–21 ன் கீழ் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.01.2022 –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருமணி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட -2.46 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட -1.92 % குறைவு

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -2.46 %

குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருமணி கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 29 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 29**

**கோப்பு எண்.0322 /2022/ இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சந்தை பேட்டை மேல்நிலைத் தொட்டிக்கு பின்புறம் சுற்றுசுவர் (நீளம் –65.0.மீ, உயரம் –1.80.மீ) கட்டுதல் பணியை 15வது மத்திய மாநில குழு நிதி (Tied Grant) 2021–22 ன் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.01.2022 –ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.ஜி. கண்ஸ்ட்ரக்ஷன் மதிப்பீட்டை விட - 2.00 % குறைவு
2. திவ்ய தர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட -5.16 % குறைவு

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -5.16 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திவ்ய தர்ஷினி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 30 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 30**

**ந.க.எண்.00269 /2022/இ1**

நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்–**1** ஏசி நகர் பகுதியில் வடிகால் வசதிகள் இல்லாததால், மழைநீர் செல்ல வழியின்றி சாலை ஓரங்களிலேயே தேங்குவதால் சுகாதார கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ **62.00** லட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 31 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 31**

**கோப்பு எண். 2085 /2021/ இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகம் திருப்பூர் – தாராபுரம் சாலையில் செயல்பட்டு வருகிறது. இவ்வலுக வளாகத்தில் முன்புறம் அமைந்துள்ள ஆதார் மையம் , சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தும் பொருட்கள் இருப்பு வைக்கும் அறை மற்றும் பயனாளிகள் அமர நிழற்கூடம் ஆகியவை அமைந்துள்ளன. இவை அனைத்தும் அலுவலகத்திற்கு வரும் வாகனங்கள் எளிதில் வெளியேற இடையூறாக அமைந்துள்ளதோடு, மற்றும் அலுவலகத்திற்கு இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் வரும் பொதுமக்கள் தங்கள் வாகனங்களை நிறுத்துவதிலும் இடையூறுகள் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்காணும் இடையூறாக உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும், இடிக்கப்பட்ட இடத்தில் மராமத்து பணி மேற்கொள்ளவும் மற்றும் அலுவலகத்தில் முன்புறமுள்ள காம்பவுண்டு சுவற்றின் உயரத்தை அதிகப்படுத்தவும் வேண்டியுள்ளது. மேற்படி

பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு **ரூ.3.60** இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| **தீர்மானம் எண் :** | 32 |
|---|---|
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 32**

**ந.க.எண்.00240 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்–**1** வாய்க்கால் மேடு பகுதியில் வடிகால் வசதிகள் இல்லாததால் மழைநீர் செல்ல வழியின்றி சாலையிலேயே தேங்குவதால் சுகாதார கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி அவசியமாகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**19.60** லட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| **தீர்மானம் எண் :** | 33 |
|---|---|
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | முழு மானியமாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 33**

**கோப்பு எண். 2072 /2021/ இ1**

காங்கயம் நகராட்சி அலுவலகம் திருப்பூர் – தாராபுரம் சாலையில் செயல்பட்டு வருகிறது. நடைபெற்று முடிந்த நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு தனி அறை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. ஒதுக்கப்படும் நகர்மன்ற தலைவர் அறையில் புதியதாக False Ceiling , Aluminium partition, கழிப்பிடம், உட்கரா இருக்கை,டேபிள், பார்வையாளர்கள் அமர இருக்கை மற்றும் தரைதளம் டைலஸ் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் பணிகளை மேற்கொண்டு நகர்மன்ற தலைவர் அறையை புதுப்பிக்க வேண்டியுள்ளது .மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.20 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 34 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 34**

**ந.க.எண். 00257 /2022/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, கே.ஜி.கே.நகர் பகுதியில் மழைநீர் செல்ல போதிய மழைநீர் வடிகால் வசதி இல்லாததால், சாலைகளின் ஓரங்களிலேயே தண்ணீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி அவசியமாகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.40.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 35 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | முழு மானியமாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 35**

**ந.க.எண்.00281 /2022/இ1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17 இல் அமைந்துள்ள பதுமன் குளத்தில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021 2022 இன் கீழ் ரூ 404.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பணிகளை மேற்கொள்ள குளத்தின் கரைகளை பலப்படுத்த வேண்டியுள்ளது. கரைகளை பலப்படுத்த அருகில் போதுமான மண் இல்லாத காரணத்தால், Compost Yard இல் உள்ள மண் குவியலை பதுமன் குளதிற்கு shifting செய்யும் பணி அவசியமாகிறது. இதற்கு ரூ 1.80 லட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 36 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 36**

**ந.க.எண்.00251 /2022/இ1**

காங்கயம் நகராட்சி பகுதியில் உள்ள தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகள் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொழுது சாலைகள் சேதம் அடைய வாய்ப்புள்ளது. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே, இதனை சரிசெய்ய சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ9.70 லட்சம் ஆகும். உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 37 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 37**

**ந.க.எண்.00250 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட கரூர் முத்தூர் பிரிவு சாலையில் அமைக்கப்பட்டுள்ள 200 WATTS HIGH MAST LIGHT நெடுஞ்சாலைத் துறையின் சாலை விரிவாக்க பணிகளுக்காக அப்புறப்படுத்தப்பட்டது. தற்போது விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டதால் 200WATTS HIGH MAST LIGHT மீண்டும் அதே இடத்தில் பொருத்தும் பணி அவசியம் ஆகும். மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் விதி எண் 15ன் கீழ் பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 38 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 38**

**ந.க.எண்.00238 /2022/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 அண்ணா நகர் பகுதியானது வறுமை கோட்டிக்கு கீழ் உள்ள பொதுமக்கள் வாழும் பகுதியாகும். இப்பகுதி மக்களுக்கு தங்களுடைய வீடுகளில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை நடத்த போதுமான இட வசதி இல்லாமல் சிரமத்திற்குள்ளாகிறார்கள். சுப நிகழ்ச்சிகளை மேற்கொள்ள சமுதாயக் கூடம் கட்ட வேண்டியுள்ளது.

சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ32.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை முழு மானியமாக நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 39 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | முழு மானியமாக அரசிற்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 39**

**ந.க.எண். 00276 /2022/இ1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 12 அய்யாச்சாமி காலனி முதல் வீதியில் உள்ள குறுக்கு வீதிகளுக்கு மழைநீர் வடிகாலை கடந்து செல்ல சிறு பாலம் இல்லாததால் இப்பகுதியில் வாழும் பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள், மழைநீர் வடிகாலை கடந்து செல்வதற்கு பெரிதும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, பொதுமக்களின் நலனில் அக்கறைக் கொண்டு, குறுக்கு வீதிகளின் முகப்புகளில் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது.

சிறுபாலங்கள் அமைக்க ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :**மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 40 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 40**

**கோப்பு எண்544/2022/எச்1**

காங்கயம் நகராட்சியின் **2022– 2023** ஆம் ஆண்டுக்கான பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினி ஆட்டோ, ஜே,சி.பி, லாரி, டிராக்டர் ஆகிய மோட்டார் வாகனங்களுக்கு **சாலைவரி மற்றும் ஆயுள் காப்பீடு புதுப்பித்தல்** செய்து அதற்க்கான தொகை உரிய கணக்கில் செலுத்தவும் மேற்படி நிதி ஆண்டிற்கு உத்தேசமாக ரூ. **30.00** இலட்சத்துக்கான செலவுகள் மேற்கொள்ளவும் நகராட்சி பொது நிதியிலிருந்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 41 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்:41**

**கோப்பு எண்543/2022/எச்1**

காங்கயம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினி ஆட்டோ, ஜே,சி.பி, லாரி, டிராக்டர் ஆகிய மோட்டார் வாகனங்களுக்கு தகுதிச்சான்று **2022– 2023** ஆம் ஆண்டுக்கான **மோட்டார் வாகன ஆய்வு கட்டணம்** செலுத்த மேற்படி நிதி ஆண்டிற்கு உத்தேசமாக ரூ. **30.00** இலட்சத்துக்கான செலவுகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம். மேற்படி அங்கீகரிக்கப்ட்ட பணிமனையில் பழுதுகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 42 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 42**

**கோப்பு எண்545/2022/எச்1**

காங்கயம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் **2022– 2023** ஆம் ஆண்டுக்கான தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) செயல்படுத்தப்படும் தினசரி சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்தெடுத்தல், உரம் தயாரித்தல், திறந்த வெளி மலம் கழித்தல் (ODF), மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் மின்னணு மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களை குறித்து **ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தல் மற்றும் விழிப்புணர்வு குறித்த தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திட** அதற்க்கான செலவினத் தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.00** இலட்சத்துக்கான செலவுகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 43 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 43**

**கோப்பு எண் 546 /2022/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **18** முடிய உள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண் **554/2017/வி8**, நாள் **06.05.2021** ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி நகராட்சிப்பகுதிகளில் கழிவுநீர் கால்வாய்களில் அடைப்பு ஏதுமின்றி சுத்தம் செய்தல் பணி நடைபெறுகிறது. தினசரி சேகரமாகும் குப்பைகளை நகராட்சி வாகனம் முன் அன்றாடம் தேய்வின்றி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் டெங்குகாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய கொசுப்புழு உற்பத்தியை தடுக்கும் வகையில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களைக் கொண்டு தினசரி வீடுவீடாக சென்று கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைக்காக நல்ல தண்ணீரில் **அபேட் மருந்து** தெளித்தல் வீட்டை சுற்றிலும் தண்ணீர் தேங்காமல் பாதுகாத்துக் கொள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. மேலும் கொசுக்களை

அழிக்க தேவையான **பைரீத்திரம் 2% எக்ஸ்டிரேட்** வாங்கி முதிர்கொசுக்களை அழிக்கவும் அசுத்தமான நீர்நிலைகளில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அழிக்க தேவையான மருந்து **பேசில்லஸ் துரின்தன்சீஸ்** தேவையான அளவு **அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து** வாங்கிடவும் **2022–2023** ஆம் ஆண்டுக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**18.00** இலட்சத்தை மன்றபொருள் வைத்திடவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்கிடவும் இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 44 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 44**

**கோப்பு எண் .547/2022/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **1** முதல் **18** முடிய உள்ள பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையம், இலவச சிறுநீர் கழிப்பிடங்கள் தினசரி மார்க்கெட் சென்னிமலை ரோடு, வாரச்சந்தை குப்பை கிடங்கு ஆகிய இடங்களில் மற்றும் அரசு மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனைகள் குடியிருப்பு பகுதிகள் மற்றும் அம்மா உணவகம், மின்மயானப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் **பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்தும் மற்றும் கூட்டுறவு பண்டக சாலை**யின் மூலம் சுகாதாரத்திற்கு அத்திவாசியம் என்பதால் நேரடியாக கொள்முதல் செய்திடவும் **2022–2023** ம் ஆண்டிற்கு பொது சுகாதார பிரிவின் மூலம் வாங்கிடவும் மேற்படி பொருட்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தே செலவினமாக ரூ. **15.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 45 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 45**

**கோப்பு எண்.548/2022/எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதார பிரிவு 2022–2023 ஆம் ஆண்டுக்கான வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கும், சாக்கடை சுத்தம் செய்வதற்கும், தெருக்களை கூட்டி சுத்தம் செய்தல், சாலையோரங்களில் வளர்ந்துள்ள புல், முள் செடிகளை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கூட்டுறவு பண்டகசாலையில் கொள்முதல் செய்து **தளவாட சாமான்கள்** வாங்கிட உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளலாம்.

| **தீர்மானம் எண் :** | 46 |
|---|---|
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 46**

**கோப்பு எண் .549/2022/எச்1**

காங்கயம் நகராட்சி **2022– 2023** ஆம் ஆண்டுக்காக பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் லாரி, டிப்பர் லாரி, மினி ஆட்டோக்கள், ஜே.சி.பி, டிராக்டர், ஈப்பு வாகனம் ஆகிய வாகனங்களுக்கு **எரிபொருள் நிரப்பிட (டீசல், இன்ஜீன் ஆயில் மற்றும் பெட்ரோல்)** உத்தேசமாக ரூ. **35.00** இலட்சம் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

| **தீர்மானம் எண் :** | 47 |
|---|---|
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 47**

**கோப்பு எண் .550/2022/எச்1**

காங்கயம் நகராட்சி **2022– 2023** ஆம் ஆண்டுக்காக பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர், டிப்பர் லாரி, டிப்பர் லாரி, மினி ஆட்டோக்கள், ஜே.சி.பி, டிராக்டர், ஈப்பு வாகனம் ஆகிய வாகனங்களுக்கு ஏற்படும் சிறு பழுதுகளை சரிசெய்தமைக்காகவும் **சில்லரை செலவினங்களை** மேற்கொள்ள உத்தேசமாக ரூ. **1.00** இலட்சம் மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 48 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 48**

**ந.க.எண்.551/2022 /எச்1**

பொது சுகாதார பிரிவு **2022–2023** ஆம் ஆண்டுக்கான காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **18** முடிய உள்ள குடியிருப்புகள், இதர நிறுவனங்கள் பன்றி காய்ச்சல் மற்றும் இதர காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான வாரச்சந்தை, தினசரி மார்க்கெட், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை வளாக பகுதி, அரசு அலுவலகங்கள் ஆகிய பகுதிகளில் நோய்த் தொற்று ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள **கிருமிநாசினி மருந்து லெமன் கிராஸ்** தேவையான அளவு **அங்கீகரிக்கப்பட்டட நிறுவனத்திடம்** இருந்து வாங்கிட உத்தேச மதிப்பீடு ரூ.**5.00** இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 49 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 49**

**கோப்பு எண்554/2022/எச்1**

காங்கயம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவு **2022–2023** ஆம் ஆண்டுக்கான பிரிவில் இயங்கி வரும் பேட்டரி வாகனங்களுக்கு அவ்வப்போது பொது சுகாதாரப் பிரிவில் ஏற்படும் சிறு சிறு பழுதுகளை மற்றும் புதிய பேட்டரி வாங்குதல் ஆகிய பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் நகரப்பகுதிகளில் உள்ள குப்பைகளை எளிமையாக அப்புறப்படுத்திடவும் மேற்படி **பேட்டரி வாகனம் பயன்பாட்டிற்கு உள்ளதால் அதற்குண்டான பராமரிப்பு மற்றும் ஆண்டு செலவினத் தொகை** வழங்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. ரூ. **30.00** இலட்சத்துக்கான செலவுகள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம். மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பழுதுகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 50 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 50**

**கோப்பு எண் 556 /2022 /எச்1**

காங்கயம் நகராட்சியில் தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டமான அம்மா உணவகம் மூலம் ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் பயன்பெறும் வகையில் காலை – இட்லி, மதியம் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் மிகக் குறைந்த விலையில் உணவுகள் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. **2022–2023**ம் ஆண்டிற்கு உணவுகள் தயார் செய்ய தேவையான **புழுங்கல் அரிசி, பச்சரிசி, மளிகைப் பொருட்கள், காய்கறிகள், பால், கேஸ் சிலிண்டர், உணவு தயார்செய்யும் மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கான ஊதியம், ரசீது புத்தகம்** மற்றும் உணவகத்தில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்தல் ஆகிய பணிகளின் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**60.00** இலட்சம் செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 51 |
| **நாள் :** | 30.03.2022 |
| **தீர்மானம் :** | அங்கீகரிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 51**

**கோப்பு எண் 558/2022/எச்1**

